tnkalvi.online

அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை 600 006
மேல்நிலைப்பொதுத்தேர்வு இரண்டாமாண்டு – மார்ச் 2025
சிறப்புத் தமிழ் – விடைக்குறிப்புகள்

பகுதி–I

	அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்		20X1 = 20
வினா எண்	**விடை**		**மதிப்பெண்**
1	(அ)	கவிதையில் உரிப்பொருள் இன்றியமையாதது	1
2	(அ)	தான் தங்கியிருக்கும் கிளையை வெட்டி தானும் வீழ்ந்து உயிர் விடல்	1 1
3	(ஈ)	பள்ளு	1
4	(அ)	(1) (3) சரியானவை	1
5	(ஆ)	முன்னோக்கு முறை	1
6	(ஈ)	மாறுதல் – அசோகமித்திரன்	1
7	(ஆ)	கதை	1
8	(ஈ)	பரிதிமாற்கலைஞர்	1
9	(அ)	தெருக்கூத்து	1
10	(ஈ)	தொடரின் இடையில்	1
11	(ஈ)	நூலைப்படி – ஏணிப்படி (4) இலக்கணச் சூழல்	1
12	(அ)	விக்டர் யூகோ	1
13	(ஆ)	உரைச்சித்திரம்	1
14	(இ)	வினையெச்சங்கள்	1
15	(ஆ)	(1) (2) (3) சரி (4) தவறு	1
16	(அ)	மல்லிக்	1
17	(ஈ)	உணர்வுப் பகுப்பாய்வி	1
18	(ஆ)	கணினி மொழியியல்	1
19	(ஈ)	ஓட்டுநிலை மொழி	1
20	(ஈ)	(1)- (ii),(2)- (i), (3)- (iv), (4)- (iii)	1

பகுதி–II		
பின்வருவனவற்றுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 30–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்		**7X2=14**
வினா எண்	**விடை**	**மதிப்பெண்**
21	**முக்குற்றங்கள்:** காமம், வெகுளி, மயக்கம் ஆகியவை முக்குற்றங்கள் ஆகும்	**2**
22	**மணிமொழிக்கோவை:** நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகியவை ஆகும்.	**2**
23	**முதன்மையான புனைக்கதை கலைக்கூறுகள் :** கதைப்பின்னல், கதை மாந்தர்கள், சொல்முறை உத்திகள், மொழிப்பயன்பாடு, பேசுபொருள் போன்றவை முதன்மையான புனைக்கதைக் கூறுகள் ஆகும்.	**2**
24	**இலட்சியவாதப் புதினங்கள்:** அகல்விளக்கு, கள்ளோ ? காவியமோ ?, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள் போன்றவை இலட்சியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றவை.	**2**
25	**ஒருவரிக் கதை:** எடுக்கப்போகும் ஒரு திரைப்படத்தின் கதையை மிகமிகச் சுருக்கமாக ஒரு பத்தி அளவில் சொல்லப்படுகிற கதைச்சுருக்கம் 'ஒன் லைன்' அல்லது 'ஒருவரிக் கதை' என்று கூறப்படும்.	**2**
26	**மொழி ஒப்பாய்வு :** ஒரு மொழியின் பல்வேறு நிலைகளை அறியவும், அதனோடு தொடர்புடைய பல மொழிகளின் இயல்புகளை அறியவும் ஒப்பீடு தேவைப்படுகிறது.	**1** **1**
27	**கருவிசார் கலைகள்:** கரகாட்டம், களரி, சிலம்பாட்டம், பறையாட்டம், தோல்பாவைக்கூத்து, மயிலாட்டம், மரக்காலாட்டம், பொய்க்கால் குதிரை, வில்லுப்பாட்டு, காவடியாட்டம் போன்றவை கருவிசார் கலைகள் ஆகும்.	**2**
28	**தமிழின் தொன்மை :** வடமொழியின் முதற்காவியம், வால்மீகியின் இராமாயணம் என்று கூறுவர். இதில், தமிழ் வளர்த்த பாண்டியர் பற்றிய குறிப்பு வருகின்றது. வியாச முனிவரும் மகாபாரதத்தில் தமிழ்நாட்டின் சிறப்பையும் பாண்டிய அரசின் சிறப்பையும் குறிப்பிட்டுள்ளார். இவையாவும் தமிழின் தொன்மைச் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.	**1** **1**

tnkalvi.online

29	**அண்மைக் காட்சி :** மனிதனையோ, பொருளையோ அண்மையில் எடுக்கப்படும் துணிப்புக்கு அண்மைக் காட்சி என்று பெயர்.	**2**
30	**திறன்பேசி :** திறன்பேசி என்பது தொடுதிரையுடன் கூடிய கையடக்க அலைபேசி திறன்பேசி, இணையத் தேடல் வசதியுடன் கணினியின் திறன்களைக் கொண்டதாகத் திகழ்கிறது.	**2**

பகுதி III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளித்தல்
வினா எண் 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும் — **7 X 3 = 21**

வினா எண்	விடை	மதிப்பெண்
31.	• அதிகாலையில் துயில் எழுதல் வேண்டும் • தான் செய்ய வேண்டிய நல்லறங்களை சிந்திக்க வேண்டும். • தந்தையும், தாயையும் தொழுது வணங்க வேண்டும். • பிறகு தான் சிந்தித்துச் செயலைத் தொடங்க வேண்டும் என்று ஆசாரக்கோவை கூறுகிறது.	1 1 1
32.	**ஓரையாடுதல் :** • ஓரை என்பது சங்ககாலப் பெண்கள் விளையாடிய விளையாட்டாகும். • ஓரை என்றால் ஒலி எழுப்புதல் ஆகும். • கடல் மணலிலும், ஆற்று மணலிலும், வீட்டு முற்றத்தில் உள்ள மணலிலும் விளையாடப்பட்டதாக சங்க இலக்கியம் கூறுகிறது.	**1** **1** **1**
33.	**புதினத்தில் உரையாடலில் பங்கினை விளக்குதல் :** • ஒரு புதினத்தின் நிகழ்வுகளை உரையாடலே நகர்த்திச் செல்கிறது. • பாத்திரங்களின் மனநிலை, உணர்ச்சி, உள்நோக்கம் ஆகியவற்றை வெளிக் கொணர்வதே உரையாடலின் பணியாகும்.	1 2
34.	**மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் :** • மண்ணோடு மனிதன் நிகழ்த்தும் போராட்டம் வலிமையும் உக்ரமும் நிறைந்தது. • ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் இயற்கை அவனுக்கு அறைகூவல் விடுத்துக்கொண்டே இருக்கிறது. • ஒரு தடயத்திலிருந்து இன்னொரு தடயத்திற்கு உற்சாகத்தோடு அழைத்துச் செல்கிறது. • மனிதன் இடறி வீழ்வதைக் கண்டு சிரித்தாலும் மண்ணிற்கு வெற்றியின் பெருமிதம் இல்லை. • மண்ணின் வலிமைக்கு மனிதன் என்றும் தோற்றவன் என்று கந்தசாமி கூறுகிறார்.	1 1 1

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-advanced-tamil-public-answer-key-2024-25-tm · Source: Directorate of Gove…

35.	**வியல் – வியர் – வேர் விளக்குதல் :** • நிலத்திற்கு அடியில் மரம், செடி கொடிகளைத் தாங்கி நிற்கும் ஓர் உறுப்பு வேர். • நிலத்தில் ஊன்றும்போது, சிறிதாக இருந்த இவ் உறுப்பு மெல்ல மெல்ல வியலித்து வளர்கிறது. • அதன் அடிப்படையிலேயே வியல் – வியர் – வேர் என இச்சொல் உருவானது.	1 1 1
36.	• கூத்துப்பட்டறை • நிஜ நாடக இயக்கம் • பரீக்ஷா • சென்னைக் கலைக்குழு • கூட்டுக் குரல் • மௌனக் குரல் போன்றவை ஆகும்.	1 1 1
37.	• ஒவ்வொரு நிகழ்வையும் தனித்தனி காட்சித் துணிப்புகளாக எடுத்து அவற்றை ஒன்றாக இணைத்து காட்டுவதே காட்சி ஆகும். • காட்சித்துணிப்பு, அண்மைக்காட்சி, இடைநிலைக்காட்சி சேய்மைக்காட்சி, முழுக்காட்சி எனப் பல வகையாக அமையும்.	2 1
38.	உலகில் சிறந்ததென்று உணர்ந்து சிந்திக்கப் பெறுவதைத் தன்னலமற்ற முறையில் அறிந்து பரப்புவதற்கு முயற்சி செய்வது திறனாய்வாகும்.	3
39.	**இ– பய் சிறப்பான வசதிகள் :** • மின் – பதிப்பு என்பது நவீன மின்னூல்களை வெளிடுவதற்காக, அனைத்துலக மின்பதிப்புக் குழுமத்தால் உருவாக்கப்பட்ட தளமாகும். • இது இணையத்தில் வெளியிடப்படும் மின் நூல் அமைப்பில் உள்ள வசதிகளுடன் கூடியது ஆகும்.	2 1
40.	**தொலைக்காட்சி – செய்தி வாசிப்பு :** • தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பவர்கள் நேரான பார்வையில் வாசித்தல் வேண்டும். • தேவையற்ற உடல் அசைவு கூடாது. • செய்தி வாசிப்பாளரின் ஒப்பனை நேயர்களின் கவனச்சிதறலுக்கு இடம்தராமல் இருத்தல் வேண்டும். • செய்தி வாசித்தல் நேரடி ஒளிபரப்பு ஆகையால் செய்தியை முன்னரே வாசித்துப் பார்த்தல் வேண்டும். • குரலில் தடுமாற்றம், நடுக்கம் இருத்தல் கூடாது.	1 1 1

	பகுதி – IV	
	குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்	**7 X 5 = 35**
41 (அ)	**சிலப்பதிகாரக் காப்பியச் சிறப்புகள்** 1. குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் இந்நூல் அழைக்கப்படுகிறது. 2. அரங்க அமைப்பு முறைகள் பற்றி செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. 3. பூம்புகார், மதுரை, வஞ்சிமாநகர் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும், அக்காலச் சமுதாய அமைப்பையும் 4. ஆடல் வகைகள், இசைக் கருவிகள், கல்வி, வணிகம் பற்றிய குறிப்புகளையும், மூவேந்தர் ஆட்சி முறை பற்றி செய்திகளையும் கூறுகிறது. தமிழுக்குக் கிடைத் அரிய காப்பிய கருவூலமாகச் சிலம்பைக் கருதலாம்.	**1** **1** **1** **1** **1**
41 (ஆ)	**தமிழ்க் கவிதையின் போக்குகள்** 1. தொல்காப்பியரின் கவிதையில் தந்துள்ள மரபைப் பின்பற்றித் தமிழில் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் கவிதைகள் எழுதப்பட்டன. 2. சங்க கால இலக்கியத்தில் புற இலக்கியம் அறிவியல். கருத்தை கூறுவதாகவும், எதிரில் இருப்பவருடன் உரையாற்றுவது போலவும் இருந்திருக்கின்றன. **எ.கா–** “யாதும் ஊரே யாவரும் கேளிர்” கணியன் பூங்குன்றனார், எதிரில் இருப்பவருடன் உரையாற்றுவதாக புறப்பாடல் எழுதியுள்ளார். 1. அகத்தினையினைத் தொடர்ந்து பக்திமைப் பாடல்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. 2. சிற்றிலக்கியங்கள் தனித்தனி பாடல்கள் அவரவரர் மனவோட்டத்திற்கு ஏற்ப வளர்ச்சி பெற்றன. 3. இவ்வாறு காலத்திற்கு ஏற்ப தமிழ் கவிதைகள் மாற்றம் அடைந்து ஏற்றம் பெற்றுள்ளன.	**1** **2** **2**

42 (அ)	புதினங்களின் நவீனம் மரபு சார்ந்த கட்டமைப்புகளை தகர்த்தி இயல்பாகப் பேசுவது நடைமுறை வாழ்வில் மக்கள் எதிர்கொள்ளும் அகம் மற்றும் புற வாழ்வுச் சிக்கல்களை எடுத்துக் கூறுவது. தற்காலத்தில் இப்புதினங்கள் கிராமத்து வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட புதினங்கள், முற்போக்குப் புதினங்கள், வட்டார வழக்குப் புதினங்கள் என பலவகையில் விரிவடைந்துள்ளன. கிராமப் பின்னணியாகக் கொண்ட நாவல்களைப் படைப்பதில் சிறந்தவர் ஆர்.ஷண்முகசுந்தரம் ஆவார். இவரது நாவல்கள் நாகம்மாள் பூவும் பிஞ்சும் அழியாக் கோலங்கள் ஆகும். முற்போக்குப் புதினங்களை முதலில் தந்தவர் தொ.மு.சி.ரகுநாதன் ஆவார். அவர் இயற்றிய புதினம் பஞ்சும், பசியும் ஆகும். வட்டாரப் புதினம் எழுதுவதில் சிறந்தவர் கி.ராஜநாராயணன் ஆவார். அவருடைய நாவல்கள் கோபல்ல கிராமம், கிடை போன்ற நாவல்கள் ஆகும்.	**2** **1** **1** **1**
42 (ஆ)	புழை–புழல்–புடல்–புடலங்காய் புழை புழை என்பது துறையைக் குறிக்கும் தமிழ்ச்சொல் நீர் ஓடும் துளையுள்ள இடமே புழைக்கடை பேச்சு வழக்கில் இப்புழைக்கடை புழக்கடை எனப்படும் புழல் உள்துளையுடைய காய் புழல்காய் புடல் புழல்காய் புடல்காய் ஆனது புடலங்காய் இப்புடல்காய் புடலங்காய்–பொடலங்காய் – பொள்ளங்காய் ஆனது.	**2** **2** **1**
43 (அ)	**தாய் – புதினம் – நதாஷா பாத்திரம் :** • சுரண்டப்படும் தொழிலாளி வர்க்கமும், நிர்கதியான விவசாயிகளும், இளைஞர்களும் புரட்சியை நோக்கி எப்படி எழுச்சி பெறுகிறார்கள் என்பதை விளக்குவது தாய் புதினம். • விருந்தாளிகளுக்கு புத்தகத்தை வாசித்துக்காட்டும் போது, தலையை ஆட்டி, குரலைத் தாழ்த்தி படித்த விஷயத்தைப் பற்றிய தனது அபிப்ராயத்தை, விமர்சனத்தை தனக்கு எதிராக இருப்பவர்களை நோக்கி அன்புடன் சொல்பவள் நதாஷா என்பதிலிருந்து அப்புரட்சிப் பெண்ணின் அறிவுத் திறனை, நேர்த்தியை அறியலாம். • ‘‘விருந்து கொடுக்கிற நீங்கள் விருந்தாளிகளான எங்களுக்கு	**2** **1** **1**

	எப்படி இடைஞ்சலாக ,இருக்க முடியும்'' என்று தாயிடம் நதாஷா பதிலளிப்பதிலிருந்து புரட்சிப் பெண்ணான அவள் பெரியோரிடத்தில் மதிப்பும் மரியாதையும் உடையவள் என அறிய முடிகிறது. • நிகலாய், பியோதர் போன்றோர் தங்களிடையே எதிர்வாதம் செய்தபோது, நதாஷா அவர்களிடத்தில், ''நாம் சகல விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை யார் ஒப்புக் கொள்கிறார்களோ, அவர்கள் சொல்வதே சரியானது..... ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நம்மிடத்தில் நேர்மையான, உண்மையான தீர்ப்பும் தீர்மானமும் இருந்தேயாகவேண்டும்.'' என நதாஷா கூறுவதிலிருந்து அவளது பகுத்தறிவு சிந்தனையை அறிய முடிகிறது. (மாணவனின் சொந்த கருத்துகள் ஏற்புடையதாக இருப்பின் தகுந்த மதிப்பெண் வழங்கலாம்)	1
43 (ஆ)	**தமிழ்த் திரைப்பட வரலாறு :** 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1900 இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணா சாலையில் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் ஆகும். 1905 ல் திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்செனட் 'எடிசன் சினிமாட்டோ கிராப்' என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார். தமிழில் முதல் பேசும் படம் 'குறத்திப் பாட்டும் டான்ஸீம்' ஆகும். இது நான்கு சுருளைக் கொண்டது. அதன்பிறகு 'காளிதாஸ்' தமிழில் வெளிவந்த முழு நீள பேசும் திரைப்படம் ஆகும். காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியாலும், இயக்குநர்களாலும் தமிழ்த் திரைப்படங்கள் வளர்ச்சி அடைந்தன.	2 1 1 1


44 (அ)	**பாடல்சார் கலைகள் :** • நிகழ்த்துகலைகளுள் பாடலுக்கு முக்கியத்துவம் அளித்து அரங்கேற்றப்படும் கலைகளைப் பாடல் கலைகள் என்பர். • பாடலுக்கேற்ற நடன அசைகளுடன் கூடியவை இக்கலைகள், இலாவணி, உடுக்கைப் பாட்டு, பகல்வேடம், இராஜா ராணி ஆட்டம் போன்றவை பாடலோடு இணைந்து நிகழ்த்தப்படுகின்ற பாடல்சார் கலைகளாகும். • **உடுக்கைப் பாட்டு :** உடுக்கு என்னும் இசைக் கருவியை அடித்துப்பாடும் கலை உடுக்கைப் பாட்டு. • ஒரு கதையைப் பாடி பின்னணியாக உடுக்கடிக்கும் முறையில் இக்கதை நிகழ்கிறது. • இக்கலை நிகழ்ச்சியில் ஒருவர் உடுக்கை அடிக்க ஒரு பெண்ணோ, பெண் வேடமிட்ட ஆணோ கதைப் பாடலைப் பாடி ஆடுவர். • கோவில் சார்ந்த கலையாக முதலில் அறியப்பட்ட இக்கலை, பின்னர் சமுதாயம் சார்ந்தும் பொழுது போக்கிற்காகவும் உரியதாக மாறியுள்ளது.	**1** **1** **1** **1** **1**
44 (ஆ)	**தமிழ், பிற திராவிட மொழிகளுடன் வேர்ச்சொல் ஆய்வில்** **மலையாள மொழி :** புடல் – புடலை – புடலங்காய் என்னும் தமிழ் வழக்கினை ‘படோல்’ என அழைக்கின்றனர். **கன்னட மொழி :** பாம்பு – ‘ஹாவு’ எனவும், பல்லி – ‘ஹல்லி’ எனவும் கன்னடத்தில் திரிந்துள்ளன. **தெலுங்கு மொழி :** தம்முன், தம்பி என்பன தமிழ்ச் சொற்கள் தன்முன் பிறந்தவன் – தம்முன், தன்பின் பிறந்தவன்– தம்பி, இதையே தெலுங்கில் ‘தம்முடு’ என அழைப்பர். **துளு மொழி :** ஊசல் – ஊஞ்சல் என்பன நல்ல தமிழ்ச்சொற்கள் தமிழின் ஊஞ்சலைத் துரு, ‘‘உஜ்ஜாலு’’ என்றழைபபர்	**2** **2** **1**

45 அ)	**உளவியல் அணுகுமுறை** 1. சிலப்பதிகாரத்தில் கண்ணகி காணும் 'தீக்கனவு' அவளுடைய குழப்பமான மனநிலையின் வெளிப்பாடே ஆகும். 2. இவ்வுளவியல் அணுகுமுறை இலக்கியக் கதை மாந்தர்களின் மனநிலை தொடர்பானவை ஆகும் 3. உளவியல் அணுகுமுறையானது இலக்கியத்தின் புரியாத இடங்களைப் புரிந்துக் கொள்ளவும் உட்பொருள்களைக் குறிப்பிட்ட ஒரு கோணத்தில் விளங்கிக் கொள்ளவும் பெரிதும் உதவுகிறது. அமைப்பியல் அணுகுமுறை 1. நாஞ்சில் நாடனின் 'மிதவை' நாவல் அமைப்பியல் அணுகுமுறைக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். 2. படித்த இளைஞன் ஒருவன் சரியான வேலை கிடைக்காமல் தமிழ்நாட்டிலிருந்து நெருக்கடி மிகுந்த மும்பைக்குச் செல்கிறான். 3. அங்கே காலூன்ற முடியாமல் வெறும் மிதவையாய் அலைந்து அவதியுறுகிறான். 4. இலக்கியத்தின் பண்புநிலைகளை அவற்றிற்கு வெளியே போகாமல் உள்ளேயே நின்று அவற்றின் கட்டுமானங்களை மையமாகக் கொண்டு பேசுவதே அமைப்பியல் அணுகுமுறையாகும்.	1 1 1 1 1 1
45 (ஆ)	சொற்பொருள் மாற்றம் பற்றிய ஆய்வு தமிழில் சொற்களின் நிலை, பொருண்மை அடிப்படையில் அவை எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என்பதை அறிந்து கொள்ள வழிவகுக்கும். பலவகைப்பட்ட அகராதிகளை உருவாக்குவதற்கும் துணை புரியும் மொழிப்பெயர்ப்புக்கான அடிப்படைக் கூறுகளை அறிந்து கொள்ள வகை செய்யும். தொடரியல் பண்புக் கூறுகளைப் பெறுவதற்கு வாய்ப்புள்ளதால், இவ்வாய்வு தொடரியல் செயல்பாட்டை அறிந்து கொள்ளவும் வழிசெய்கின்றது.	2 1 2

46 (அ)	**தென்கச்சி கோ. சுவாமிநாதன் அவர்களின் வானொளி உரை** வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர் தென்கச்சி கோ. சுவாமிநாதன். வானொலியில் இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பெருமளவிலான மக்கள் காத்திருந்தனர். சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநகராக இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியில் இவரே தொகுத்து வழங்கினார். இவருடைய முகத்தைப் பார்க்காத வானொலி நேயர்களும் இவருடைய குரலைக் கேட்டவுடன் 'தென்கச்சியார் பேசுகிறார்' என்று சொல்லும் அளவிற்கு அனைவர் மனத்திலும் தம் குரலைப் பதிவு செய்தவர். இவர் கதை சொல்லும்போது அடுத்து என்ன சொல்லப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவர் மனத்திலும் தொக்கி நிற்கும். அவர் கூறும் நன்னெறிக் கதையின் முடிவில் ஒரு நகைச்சுவையினையும் கூறி முடிப்பார். அவர் சிரிக்காமல் சொல்லும் நகைச்சுவைகள் மற்றவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தன.	1 1 1 2
46 ஆ)	**ஊடகச் சட்டங்கள்:** 1. தனிநபர் அவமதிப்புச் சட்டம் 2. நாடாளுமன்ற நடவடிக்கைச் சட்டம் 3. நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் 4. அலுவலக இரகசியங்கள் சட்டம் 5. பத்திரிக்கை புத்தகங்கள் சட்டம் 6. ஆபாச வெளியீட்டுத் தடைச்சட்டம் 7. காப்புரிமைச்சட்டம் 8. இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் 9. பணிசெய் இதழாளர் சட்டம் ஏதாவது இரண்டு சட்டங்களை மட்டும் விளக்கினால் மதிப்பெண் கொடுக்கலாம்.	3 2

47(அ)	மகாகவி மைதிலி செம்மல் வித்தியாபதியின் அகத்திணை கவிதை ஒன்றை தீரா கேட்டது. அக்கவிதையானது "அவள் சென்ற திசைநோக்கி என் கண்களும் சென்றன இனிய முகம், அழகிய பருவம் தேன் குடித்த இரு வண்டுகள் பறக்கச் சிறகடித்து போல் ஒளி உமிழும் இரு கண்கள்" மைதிலி மொழியில் அமைந்த இக்கவிதையை தீரா பதிவு செய்துக்கொண்டது. இக்கவிதைக்கு ஏற்ற கவிதை குறுந்தொகையில் மள்ளனார் பாடிய கவிதையை பொருத்திப் பார்த்தது. " பூவொத் தலமருந் தகைய ……. என்றும் பாடலாகும்"	2 1 2
	விளக்கம் பெரிய மலைநாட்டில் விரும்பி விதைத்தத் தினைக்காட்டில் குருவிகளை ஓட்டுகிற தேன்போன்ற மொழியினையும் திரண்ட மெல்லிய தோளினையும் உடைய தலைவியின் பெரிய குளிர்ந்த கண்கள், பூவினைப் போல் சுழலும் தன்மையதாகவும் அம்பினைப் போல் எல்லோரும் அறியத் துன்பம் செய்வதாகவும் இருக்கின்றன. இவ்வாறு மைதிலி பாடல்களிலிருந்து தீரா ஒப்பீடு செய்துக்கொண்டது.	

tnkalvi.online

47(ஆ)	**தொடரியல் பகுப்பாய்வி :** தொடரியல் செயலாக்கத்தைக் கணினி வழி செய்யும் கருவியே தொடரியல் பகுப்பாய்வி. அனைத்துச் சொற்களுக்கும் மொழியியல் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் இலக்கணக் குறிப்பைக் கொண்டு இக்கருவி செயல்படும்.	2
	பெயர், வினை, இடைச் சொற்கள், எச்சங்கள், அடைமொழிகள், சொல்லுருபுகள், வினாச் சொற்கள் பற்றிய குறிப்புகளைக் கொண்டு பகுக்கப்பட்டிருக்கும். 'இராமன் சீதையை மணந்தான்' என்ற சொற்றொடர் வரிசையிலிருந்து பின்வரும் பகுத்தாயப்பட்ட கிளை அமைப்பைப் பெறலாம்.	
	 	2
	இக்கருவி தொடரில் இலக்கணப்பிழை இருக்கிறதா ? இல்லையா ? என்பதைக் கண்டறிந்து திருத்தும் இலக்கணப்பிழை திருத்தியை உருவாக்குவதற்கும் இத்தொடரியல் பகுப்பாய்வி தான் உதவும்.	1

tnkalvi.online